நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதல்வரின் லட்சணம் பாரீர்!

பருவமழை தீவிரம்! 10 நாட்களாக ஒரு அறிக்கைகூட இல்லை!

தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திடம் சிக்கிய விஜய் அரசு! முழு பின்னணி!

சென்னை, அக்.31-

அக்டோபர் 16 முதல் அக்டோபர் 26 வரை, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்குத் தமிழக அரசு தினசரி சூழ்நிலை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தீவிர மடைந்துள்ள இச்சூழலில், மாநிலத்தில் நிலவும் பேரிடர் பாதிப்புகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்த கள நிலவரத்தை ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கும் முதன்மை ஆவணமாக இந்த அறிக்கை திகழ்கிறது. இவ்வளவு முக்கியமான தரவுகளைத் தொடர்ந்து 10 நாட்களாகத் தமிழக அரசு சமர்ப்பிக்காதது, பேரிடர் மேலாண்மை நிர்வாகத்தின் மீதான தீவிரக் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்த தினசரி அறிக்கைகளின் அடிப்படையில்தான், எந்தெந்த மாவட்டங்களில் அதிக பாதிப்புகள் உள்ளன என்பதையும், கூடுதல் தேசிய பேரிடர் மீட்புப் படைகளை எங்கு அனுப்ப வேண்டும் என்பதையும் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தீர்மானிக்கிறது.

மாநில அரசு இந்தத் தரவுகளை அளிக்கத் தவறும்போது, அவசர காலங்களில் மீட்புப் படைகளை உடனுக்குடன் அனுப்புவதில் பெருந்தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இந்திய வானிலை ஆய்வு மையம் வழங்கும் எச்சரிக்கைகளுக்கு மாநில அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இந்த அறிக்கையே வெளிப்படுத்தும் என்பதால், இதன் பங்கு மிக முக்கியமானதாகும்.

பாதிப்புகள் மற்றும் தேவைகள் குறித்த முழுமையான அறிக்கைகள் முறையாகப் பதிவு செய்யப்படாவிட்டால், எதிர்காலத்தில் பேரிடருக்குப் பிந்தைய சேத மதிப்பீடுகளைக் கணக்கிடுவதிலும், ஒன்றிய அரசிடமிருந்து அவசரகால நிவாரண நிதியைப் பெறுவதிலும் கடுமையான நிர்வாக முட்டுக்கட்டைகள் ஏற்படும்.

அக்டோபர் மாத இறுதியில் வங்கக் கடலில் புயல் சின்னங்கள் உருவாகும் வாய்ப்புள்ளதாகவும், சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள சூழலில், இந்தத் தரவுப் பகிர்வுத் தாமதம் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

பிறந்தநாளில்

பசும்பொன் திருமகனாரின் தியாகத்தை நினைவுகூர்வோம்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, வலைதளப்பதிவு!



சென்னை, அக்.31-

பசும்பொன் திருமகனார் அவர்களின் பிறந்தநாளான நேற்று, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "பசும் பொன் திருமகனாரின் பிறந்தநாளில், அவரது தியாகத்தை நினைவுகூர்வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப்பதிவு வருமாறு:-

நேதாஜியுடன் இணைந்து ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகக் களம் கண்ட விடுதலைப் போராட்ட வீரர் பசும்பொன் திருமகனாரின் பிறந்தநாளில், அவரது தியாகத்தை நினைவுகூர்வோம்.

காலனிய ஆட்சியால் உரிமைகள் பறிக்கப்பட்ட சமூகங்களின் விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அவர் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பசும்பொன் செல்லும் வழியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு

சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் - திருப்புவனத்தில் உற்சாக வரவேற்பு!

கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!

சிவகங்கை. அக். 31-

நேற்று பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் குருபூஜை தினமாகும். இந்த குருபூஜை தினத்திற்கு கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் மதுரையிலிருந்து கார் மூலம் புறப்பட்டு பசும்பொன் நோக்கிச் சென்றார் .பசும்பொன் செல்லும் வழியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாக சிறப்பான உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.



இந்த வரவேற்பில் மதுரையில் இருந்து கார்முலம் வந்த தளபதியை முதலாவதாக முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கேஆர்.பெரியகருப் பன் புத்தகங்கள், பட்டு வேட்டி கொடுத்து வரவேற்றார்.

தொடர்ந்து முன்னாள் அமைச்சர்கள் மு. தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர். அ.கணேசன் மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார் பள்ளத்தூர் கே .எஸ் .ரவி, ஜெ. மதார்சேட், நகர் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, பெரி.பாலா, காரைக்குடி மாநகரச் செயலாளர் மேயர் நா.குணசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கை மாறன், எம்.ஏ. கடம்பசாமி, துரை.ராஜாமணி, மா. அண்ணாதுரை, அ.முத்துசாமி, திருமலை முத்துராமலிங்கம், எம். ஜெயராமன், பெ.மந்தக்காளை, ஆர்.எம்.கென்னடி, வே. ஆரோக்கியசாமி, யோக திருஷ்ணகுமார், ஆறு.செல்வராஜன், வேதமிழ்மாறன், கா. வெங்கட்ராமன், நாகநிரவி, வே. பூபால சிங்கம், லெ.மூ. ரவிச்சந்திரன், சுப. சின்னதுரை, விராமதி மாணிக்கம், நா. நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், பூமணி, கே பால சுப்பிரமணியன், பி .செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் நாகூர் கனி, பி.ஏ.நஜ்முதீன், ஜெயராமன், கதிர்வேல்,கே .பி . எஸ். பழனி அப்பன், அசோக், ராசு ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் கே. எம். பொற்கோ, எஸ். எம்.மதிவாணன் ,கார்த்தி, சபிபுல்லா , ஆர்.சேதுபதி ராஜா மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ,நிர்வாகிகள் மார்க் ரெட் கமலா, திலகவதி கண்ணன் , ராஜேஸ்வரி,எஸ்தர் மேரி ,மாவட்ட மாணவரணிஅமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம். முருகானந்தம் ,மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர்எஸ்.எஸ்.ஏ . வல்லபாய்,மாவட்ட விளையாட்டுஅணி மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ்.நாராயணன்,

மாவட்ட அயலக அணி அமைப்பாளர் கேப்டன் ஆர். வி. சரவணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது,அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம், துணை அமைப்பாளர் காளிமுத்து, மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், ஒன்றிய,,பேருர்,நகர் கழக நிர்வாகிகள் ஒன்றிய துணை செயலாளர் கள் எஸ்.முத்துகுமார், சிவபுரிசேகர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, ஜாகீர் உசேன்,,அண்ணாமலை, ஈஸ்வரன் ,அச்சங் குளம் முருகன், வே. கருணாகரன் , விவசாய அணி காளிமுத்து, தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், சுபதமிழரசன், பிள்ளையார்பட்டி சதீஷ் மானாமதுரை நகர் மன்றதுணை தலைவர் பாலா சுந்தர், முருகன், அன்புச்செல்வன், சேவியர், ஆர்.வி.எஸ். அரங்க நாதன், சுப.ஜெயக்குமார், நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் சந்திப்பில் இருந்து மேம்பாலம் வரை சுமார் 2 கிலோ மீட்டர் தூரம்அதிக அளவில் பெண்கள் நிர்வாகிகள் அளித்த வரவேற்பினை மு.க. ஸ்டாலின் ஏற்றுக் கொண்டு பின்னர் கார் மூலம் பசும்பொன் நோக்கிச் சென்றார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி: காங்கிரஸ் கூட்டணி இல்லேண்ணா தி.மு.க. இவ்வளவு இடங்களில் வெற்றி பெற்றிருக்காதுன்னும், தமிழ்நாட்டில் இப்போதுதான் காமராஜர் ஆட்சி நடக்குதுன்னும் மந்திரி விஸ்வநாதன் பேசி இருக்காரே பார்த்தியா!

பட்டணம் : **ஆமாமய்யா; நன்றி கெட்ட ஜென்மத்துக்கு எடுத்துக்காட்டு அவங்கெல்லாம். காமராஜர் ஆட்சியிலே இப்படியா தினம் தினம் கொலை, கொள்ளை, கற்பழிப்பெல்லாம் நடந்தது. பெருந்தலைவர் காமராஜரை இப்படியா அசிங்கப்படுத்தறது. என்ன பண்றது. பதவி படுத்தும் பாடு; அப்படி பேசச் சொல்லுது.**

நெல்லை மேற்கு மாவட்டம் – விக்கிரமசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில்

அம்பை சட்டமன்றத் தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

சு.அதியமான் தலைமை! கி.கணேசன் வரவேற்புரை! மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்பு!

நெல்லை.அக்.31.

நெல்லை மேற்கு மாவட்டம் விக்கிரமசிங்க புரம் நகர தி.மு.க சார்பில் நடைபெறயிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகிற (02-11-2026 திங்கட்கிழமை) அன்று மாலை 6 மணி அளவில் விக்கிரம சிங்கபுரம் மெயின் ரோடு குருபாலா திருமண மண்டபத்தில் நகர அவைத்தலைவர் சு.அதியமான் தலைமையில் நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வ சுரேஷ் பெருமாள், நகர பொருளாளர் பெ. இரவி,மாவட்ட பிரதிநிதிகள் இசக்கி பாண்டியன், சு. பிரபாகரன், நகர துணை செயலாளர்கள் ஜயப்பன்,செல்வகுமாரி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.நகர செயலாளர் கி.கணேசன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.சி. பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி,தமிழ்ச்செல்வன்,ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், ஜெகன், முத்துப் பாண்டி என்ற பிரபு, முத்துக் கிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தவசுபாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஜான் ரவீந்தர் (இளைஞரணி) முத்துகிருஷ்ணன் (மாணவரணி) ஜெ.செல்வ கூடாமணி (வழக்கறிஞரணி) பிரேம் ஆனந்த் (தகவல் தொழில்நுட்ப அணி. சு.க.நெடுஞ்செழியன் (கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை) நெல்லை மணி (இலக்கிய அணி) பாலச்சந்தர் (ஆதிதிராவிடரணி) பீர்முஹம்மது (அயலக அணி) அன்வர் உசேன் (நெசவாளர் அணி) தவசி மணிகண்டன் (விளையாட்டு மேம்பாட்டு அணி)திலகா சிற்றரசன் (நகர்மன்ற துணை தலைவர்) பிரகாஷ் +அமைப்பு சாரா ஓட்டுனர் அணி) அருண் (பொருளாளரணி) பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன்,அபூபக்கர், ராமச்சந்திரன்,பேரூர் செயலாளர்கள் இசக்கி பாண்டியன், முத்து கணேஷ், சுப்பையா, மணிஷா செல்வ ராஜ், சிந்தாமதார், மணிகண்டன், வானுமாமலை உள்பட அணி துணை அமைப்பாளர்கள் வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், நகர தகவல் தொழில் நுட்ப அணியினர், நகர மாணவரணியினர்,மகளிரணியினர் வார்டு கழக பிரதிநிதிகள், கழக முன்னணியினர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை விக்கிரமசிங்கபுரம் நகர தி.மு.க.வினர் செய்துள்ளனர்.

வாசுதேவநல்லூர் தொகுதி – சுற்றுவட்டாரப் பகுதி மக்களின்

நீண்ட கால ரயில் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிடுக!

மதுரை கோட்ட ரயில்வே மேலாளரிடம் ஈ.ராஜா எம்.எல்.ஏ. கோரிக்கை!

தென்காசி.அக்.31.

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனாவை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் சுற்றுவட்டாரப் பொதுமக்களின் நீண்டகால ரயில் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முக்கிய கோரிக்கைகள்:-

கரிவலம்வந்தநல்லூர் ரயில் நிலையத்தை மீண்டும் திறந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். பாம்புகோவில்சந்தை ரயில் நிலையத்தில் அவ்வழியாகச் செல்லும் அனைத்து தகுதியான ரயில்களுக்கும் நிறுத்தம் வழங்க வேண்டும்.



திருநெல்வேலி – பெங்களூரு இடையே தென்காசி, பாம்புகோவில்சந்தை வழியாக புதிய விரைவு ரயில் இயக்க வேண்டும். தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சென்னை மற்றும் பெங்களூரிலிருந்து தென்காசி, பாம்புகோவில் சந்தை வழியாகதிருநெல்வேலிக்கு சிறப்பு ரயில்களை இருமார்க்கங்களிலும் இயக்க வேண்டும்.

சென்னை – தென்காசி இடையே பாம்புகோவில்சந்தை வழியாக பகல்நேர இன்டர்சிட்டி விரைவு ரயில் அறிமுகப் படுத்த வேண்டும்.

கோவை – மதுரை இன்டர்சிட்டி விரைவு ரயிலை (16721/16722) தென்காசி, பாம்புகோவில்சந்தை வழியாக செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும்.

திருநெல்வேலி – மேட்டுப்பாளையம் வாராந்திர சிறப்பு ரயிலை தென்காசி, பாம்புகோவில்சந்தை வழியாக நிரந்தர ரயில் சேவையாக மாற்ற வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மாணவர்கள், தொழிலாளர்கள்,விவசாயிகள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பயனடை வதுடன், இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியும் மேம்படும்.

எனவே,பொதுமக்களின் நலன் கருதி இக்கோரிக்கைகளைப் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட ரயில்வே அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்
அக்டோபர் 31 (1977)



செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.

இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.